விலை: 90.00
பக்கங்கள் : 12 viber : 076 636 3378


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 239 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 30 திங்கட்கிழமை (15.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## அமைதியை சீனா சீர்குலைத்தால் இராஜதந்திர உறவுகள் பாதிக்கும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர்



(பெங்களூரு)

எல்லைப் பகுதியில் நிலவும் அமைதியை சீனா சீர்குலைக்குமாயின் அது இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய - சீன பிரச்சினை தொடர்பில் பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் கொள்கையின் மூலம் இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் 11

## அத்தியாவசிய மருந்துகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் மீண்டும் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்

இந்த நிலைமை காரணமாக வைத் 11

## மானிப்பாயில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

### சுப்பர் மார்க்கெட்டும் அடித்து உடைப்பு

(அராலி)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத மூவர், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் நகரத்தில் அமைந்துள்ள 11

யாழ்.பண்பாட்டு மையத்தில் இன்று

## இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (4-7)

## அமெரிக்காவின் பிடியில் மீண்டும் இலங்கை

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிரான மற்றுமொரு ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதி ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் சமர்ப்பிக்க அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



## ஆராய்ச்சியில் ஈடுபடமாட்டோம்

### சீனா உறுதி

(கொழும்பு)

"யுவான் வாங் 5" கப்பல் நாட்டின் கடல் எல்லைக்குள் எந்த அறிவியல் ஆராய்ச்சி 11

## நல்லூர்த் திருவிழாவில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

### ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வளாகத்தில் கைக் குழந்தையுடன் நின்ற பெண்ணிடம் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற பெண் யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணிடம் 11

## இலங்கை பலம் வாய்ந்த நாடுகளின் வேட்டைக்களமாக மாறிவிட்டது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நாட்டில் தற்போது வரை நிலவிவரும் நெருக்கடி நிலைமை மற்றும் வங்குரோத்து நிலைமைகள் காரணமாக பலம் வாய்ந்த நாடுகளுக்கு வேட்டைக் களமாக இலங்கை 11

செஞ்சோலை படுகொலை

## முன்னணியின் நினைவேந்தலில் குழப்பமான நிலை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணத்தில் 16 ஆவது செஞ்சோலை படுகொலை நினைவேந்தலை அனுஷ்டிக்க முற்பட்ட வேளையில் அங்கு குழப்பமான நிலை ஏற்பட்டது.

இதுகுறித்து மேலும் தெரியவருவ 11

## கொரோனா மேலும் இருவர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 2 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மர 11

## பதவிகளை ஏற்காதிருக்க ஐ.ம.ச தீர்மானம்

(கொழும்பு)

பதவிகளை ஏற்காதிருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சுமார் 70க்கும் அதிகமானோரை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

அதற்கு சர்வகட்சி அரசாங்கம் எனவும் பெயரிட்டுள்ளனர். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் அனுமதிச் சீட்டு முறையில்

# ஒரு தொலைபேசி இலக்கத்தில் பல வாகனங்களை பதிய முடியும்

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டு முறையில் பல வாகனப் பதிவுகள் தொடர்பான புதுப்பிப்பை எரிசக்தி அமைச்சர் காஞ்சனா விஜேசேகர வழங்கியுள்ளார்.

அந்த வகையில், அரச நிறுவனங்கள், நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் இப்போது ஒரு தொலைபேசி எண் அல்லது பல தொலைபேசி எண்கள் கொண்ட பல வாகனங்களை ஒரு வணிகப் பதிவு எண்ணின் கீழ் பதிவு செய்யலாம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, http://fuelpass.gov.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து, வணிக பதிவு எண் (BRN) வகையின் கீழ், முதலாவது வாகனத்தைப் பதிவு செய்யலாம்.

அதன்பின் பதிவுசெய்யப்பட்ட தொ.பேசி எண்ணின் சுயவிவரத்தில் உள்நுழைந்து, 'Add' என் பதை அழுத்துவதன் மூலம் தமது வணிகத்துக்குரிய மேலும் பல வாகனங்களை சேர்க்க முடியுமென இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது. (4-7)





வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறும் வகையில் சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு மேற்படி கருத்தரங்கைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (படங்கள் - ரவிசாந்)

காணி மோசடியால்

# பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் முறையிட முடியும் - வடக்கு ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள தம்து காணியில் மோசடியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது போலியான உறுதிப்பத்திரங்களினால் ஏமாற்றப்பட்ட காணி உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலோ அல்லது வேறு எந்த பாகத்திலும் இருக்கின்ற நிலையில் அவர்களின் காணிகள் மோசடியான வழியிலோ போலியான உறுதிப் பத்திரங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளது.

ஆகவே பாதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோரக் கூடிய ஆதாரங்களுடன் காணிப்பதிவு பற்றிய விவரங்களை பழைய பூங்கா வீதியில் உள்ள ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7,104)

# நீங்காத நினைவுகளுடன்

## 14 ஆவது ஆண்டு



## செல்வி கணேசலிங்கம் பத்மஜா

மலர்வு - 30.08.1990 உதிர்வு - 15.08.2008

ஈர விழிகளுடன் ஈரேழு ஆண்டுகள்
பாரில் கடந்து விட்டோம் பத்மஜா
காலன் கவர்ந்ததென்ன கண்மணியே
நாளும் உன் நினைவுகள் சுமந்து
பாழும் உலகினிலே பரிதவித்து நிற்கிறோம்
வீழும் வரையில் உன் நினைவுகள் சுமந்தவராய்

பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

(C-4739)

# காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029

(C-4742)

# மரண அறிவித்தல்

## அற்புதராசா கலைவாணி



தோற்றம் : 1957.05.03
மறைவு : 2022.08.13

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அற்புதராசா கலைவாணி அவர்கள் நேற்று முன்தினம் (13.08.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரத்தினவடிவேல் நவமணி தம்பதியரின் அன்பு மகளும் தனபாலசிங்கம் அற்புதராசா அவர்களின் அன்பு மனைவியும் துஸ்யந்தன் - நிசாந்தினி (நோர்வே), திவாகர் - நர்மதா (பிரான்ஸ்), நீலவண்ணன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - Luminex), பவதாரணி (கலைப்பீடம் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துஸ்யந்தன் (நோர்வே), திவாகர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சோ. காந்திமதி, இ. சிவஞானம் (SRS மரக்காலை - பருத்தித்துறை), ச. கலாமதி, வை. இந்துமதி (ஜேர்மனி), இ. வளர்மதி, இ. மதுமதி (ஆசிரியை - யா/ கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷாரா, சுர்ஜித், டியாஸ், நதீஸ், டில்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.08.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் பருத்தித்துறை நாகலிங்க முதலியார் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4740)

077 778 1371
077 518 3980

குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் ஆறுமுகம் ஜீவானந்தன்

(ஜீவன்)

மண்ணில் : 16.04.1953
விண்ணில் : 27.07.2021

கண்ணில் கருணையையும் இதயத்தில் பாசத்தையும்
வைத்திருந்து எமக்காக வாழ்ந்த எம் அப்பாவே
இனிய நினைவுகளோடு ஈடில்லா வாழ்வுதந்து
இடையே எம்மை தவிக்க விட்டு சென்றீரோ
தினந்தோறும் உங்கள் திருமுகம் காண ஏங்குகின்றோம்.

எமது குடும்பத்தலைவரை இழந்து தவித்தபோது பல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]த்தி,
சாவகச்சேரி.

077 670 7919

(12437)

நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலக கும்பலின் தலைவன் துபாயில் கைது

இலங்கையால் தேடப்பட்டு வரும் பாதாள உலகக் குற்ற வாளிக் கும்பலின் தலைவன் "ஹரக் கட்டா" என அழைக் கப்படும் நடுன் சிந்தக துபாயில் கைது செய்யப்பட்டதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு உறுதிப் படுத்தியுள்ளது.

துபாயிலிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பிரதான பாதாள உலகக் குழுத்தலைவர்களில் ஒருவ ரான் ஹரக் கட்டா என அழைக்கப்படும் நடுன் சிந்தக விக்கிரமரத்ன, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும் சர்வதேச பொலி ஸாரும் இணைந்து மேற் கொண்ட இரகசிய நடவடிக் கையின் போது கடந்த 11 ஆம் திகதி துபாய் விமான நிலை யத்தில் கைது செய்யப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் நாட்டை விட்டு துபாய்க்கு தப்பிச் சென்ற போது பயன் படுத்திய போலி வெளிநாட்டு கடவுச்சீட்டு மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# இலங்கையின் கடன்
# 104.6 வீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் அரச கடன் தொகையானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 104.6 வீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.**

2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கு இடையிலான நான்கு ஆண்டுகள் சம்பந்த மாக தேசிய கணக்காய்வு அலு வலகம் நடத்திய இலங்கை நிதிமுகாமைத்துவம் மற்றும் அரச கடன் தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணைக ளில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை நாட்டின் மொத்த தேசிய உற் பத்தியில் 86.8 வீதமாக காணப்பட்ட அரச கடன் அடுத்த இர ண்டு ஆண்டுகளில் 17.8 வீதம் என்ற அடிப்படையில் வேகமாக அதிகரித்துள்ளதாக கணக்காய்வு விசாரணை அறி க்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கை அரசு வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டு நிதி நிறுவ னங்களில் அதிகளவான கடனை பெற்றுக் கொண்டுள்ளது. இதன் காரண மாக கடன் வீதம் இவ்வாறு அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. (4)

# மருந்துப் பொருட்களின் விலை 300 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

சில வகை மருந்துப் பொருட்களின் விலைகள் 300 வீதத்தினால் உயர்வடைந் துள்ளதாக அரச மருத்துவ அதி காரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

அசாதாரண அடிப்படை யில் மருந்துப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள் ளதாகவும் இதனைக் கட்டுப் படுத்தி நோயாளிகளின் உயிர் களை காப்பாற்றுவதற்கு அர சாங்கம் தலையீடு செய்ய வேண்டு மெனவும் தெரிவித் துள்ளார்.

சில வகை மருந்துப் பொருட் களின் விலைகள் 300 வீத மாக உயர்வடைந்துள்ளது என வும் இது நோயாளிகளினால் தாங்கிக் கொள்ளக்கூடிய வகை யிலானது அல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, டொலரின் பெறுமதி அதிகரிப்பு என்பனவற்றின் தாக்கத்தை முழுமையாக மக்கள் மீது அர சாங்கம் திணிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (4)

# ஜெனிவாவை எதிர்கொள்ள விசேட பொறிமுறை
## நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட் டத்தொடரை எதிர் கொள்வ தற்கு அரசாங்கம் விசேட பொறி முறையையொன்றை தயா ரித்து வருகின்றது.

மனித உரிமைகள் பேர வையின் 51 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம் பித்து ஒக்டோபர் 7 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமை கள், பொறுப்புக்கூறல், நல்லி ணக்கத்தை ஏற்படுத்தல் உள் ளிட்ட விடயங்களில் அடைந் துள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசாங் கம் அறிக்கையை சமர்ப்பிக்க வுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர் கள் பற்றிய அலுவலகம், இழப் பீட்டுப் பணியகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப் பும் செயற்பாடுகள் பற்றி தெரி விக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித் தார்.

இதனைவிட சட்டம், ஒழு ங்கு, அரசியலமைப்பு விடயங் கள் தொடர்பாக எடுத்துரைக் கவுள்ள அதேவேளை ஐ.நா. கூட்டத் தொடரை எதிர்கொள்ள



அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களை யும் ஒன்றிணைத்து விசேட பொறிமுறையை தயாரிக்க வுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (4)

# எதிர்வரும் 19,20,21 இல் உ/த செய்முறை பரீட்சை

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் முக்கிய அறி விப்பொன்றினை விடுத்துள் ளது.

இதற்கமைய 2021 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக் கான செயன்முறை பரீட்சைக்கு தோற்ற முடியாத பரீட்சார்த் திகளுக்கு மீண்டும் பரீட்சை களில் தோற்றுவதற்கு சந்தர்ப் பம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 19, 20 மற்றும் 21 ஆகிய திகதி களில் செயன்முறை பரீட்சை கள் நடைபெறவுள்ளன.

இதன் படி, செயன் முறை பரீட்சையின் ஒரு பகுதி அல்லது முழுமையான பரீட்சைக்கு தோற்ற முடியாத 425 மாண வர்கள் இதுவரை விண்ணப் பித்துள்ளதாக பரீட்சை ஆணை யாளர் நாயகம் தெரிவித்துள் ளார். (4)

## நாடு முழுவதும்
# வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் அத்தியா வசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்ட நிலையில் அந்த விலையில் விற்பனை இடம்பெறுகின் றதா என்பதை கண்டறிய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனை நிலை யங்களில் சோதனைகளை மேற் கொள்ள நுகர்வோர் விவகார அதி காரசபை ஏற்பாடுகளை செய்துள்ளது.

மொத்த விற்பனையாளர்களுக்கு தற்போது திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. அதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையில் சிறிது குறைவு ஏற்பட்டது. (4)

# எரிபொருள் விநியோகம் தொடர்பில் அறிய புதிய செயலி

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் கிடைக்கும் எரிபொருள் நிர ப்பு நிலையங்கள் தொடர் பான சகல தகவல்களை அறிந்து கொள்வதற்கு புதிய செயலியை (App) அறி முகப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை தகவல் தொழில் நுட்ப முகவர் நிலையத்தின் தலைவர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த செயலி மூலம் நாட்டில் எரிபொருள் கிடைக் கும் எரிபொருள் நிரப்பு நிலை யங்கள் தொடர்பான தகவல் களை அறிந்து கொள்ள முடியும் என்றும் விரைவில் இந்த செயலி பொதுமக்களுக்கு அறி முகப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (4)

# செலவுகளை குறையுங்கள்
## அமைச்சர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்க செலவினங் களை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான கட்டுப்பாடு களை விதித்து ஜனாதிபதி யின் செயலாளர் அனைத்த அமைச்சுக்களின் செயலா ளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, செலவினங் களை கட்டுப்படுத்துதல் தொடர்பான திறைசேரியின் சுற்றறிக்கையை கண்டிப் பாக பின்பற்றுமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் எதிர்கொள் ளும் பொருளாதார சவால் கள் காரணமாக பொதுச் செலவினங்களை முடிய மானவரை குறைக்குமாறு அவர்களுக்குத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எரிபொருள், மின்சாரம் மற் றும் தொடர்பாடல் வசதிகள் உள்ளிட்ட சேவைகளை பயன் படுத்துவதில் கடுமையான கட் டுப்பாடுகளை விதிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# மின் வெட்டு நேரம் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரத்தை துண்டிக்கும் கால எல்லை மீண்டும் அதிக ரித்துள்ளதாக பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

அதன்படி இன்று திங்கட் கிழமை மற்றும் நாளை செவ் வாய்க்கிழமை ஒரு மணித்தி யாலம் 20 நிமிடங்களுக்கு மின்சாரத்தை துண்டிக்க தீர் மானிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி A,B,C,D,E,F, G,H,I,J,K,L,P,Q,R,S,T, U,V,W வலயங்களில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் எனவும் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது-20 போட்டியில் 600 விக்கெட்டுக்கள்

## பிராவோ சாதனை



வெஸ்ட் இண்டீஸ் அணியைச் சேர்ந்த பொல்லார்ட் அதிக இருபது-20 போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ள நிலையில் அதே அணியைச் சேர்ந்த மற்றொரு வீரரான பிராவோ இருபது-20 போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

நார்த்தன் சூப்பர் சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடிய பிராவோ, ஓவல் அணிக்கு எதிரான போட்டியில் ஒரு விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம்இருபது-20 கிரிக்கெட் 600 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனைக்கு பிராவோ சொந்தக்காரரானார்.

அவரை தவிர வேறு எந்தவொரு பவுலரும் இருபது-20 கிரிக்கெட்டில் 500 விக்கெட் என்ற மைல் கல்லை கூட இன்னும் தொடவில்லை. (4)



ஸ்ரீ லங்கா கிரிக்கெட் பிரிவு III - 2022 3 ஆவது காலிறுதி முன்போட்டியில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

# பிரியன்கனின் அதிரடி சதத்துடன்

# காலிறுதியில் விக்ரோறியன்ஸ்



இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022 தொடரின் 4 ஆவது காலிறுதி முன் போட்டியில் விக்ரோறியன்ஸ் அணி மானிப்பாய் பரீஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோறியன்ஸ் அணி களத்தடுப்பை தீர்மானிக்க மானிப்பாய் பரீஸ் அணி 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கனிஸ்ரன்-79, புருசோத்மன் ஆட்டமிழக்காது 61, சுபதீபன்-43 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் விக்ரோறியன்ஸ் அணியைச் சார்ந்த விஜயகுமார் 6 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரதீஸ் 6.4 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் செந்தூரன் 9 ஓவர்களில் 35 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரியன்கன் 10 ஓவர்களில் 51 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 42 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


பிரியன்கன் -125, துவாரகன் -41, பிரதீஸ் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரீஸ் அணி சார்பாக சுபதீபன் 7 ஓவர்களில் 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு (RATING) விக்ரோறியன்ஸ் அணி 8.77 புள்ளிகளையும் மானிப்பாய் பரீஸ் 2.51 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (க)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2687

### தீபிகா



நடந்ததை நினைத்து அழுது கொண்டு இருப்பது வாழ்க்கை அல்ல. அதை மறந்து நம்மை அழ வைத்தவர்கள் முன்னாள் சிரித்த முகத்தோடு வாழ்வதே சிறந்த வாழ்க்கை.

### ஜேந்தன்

மகன்- கணக்குப் பாடம் சொல்லித் தாங்கப்பா..
அப்பா- மகன் கணக்கு தெரியாதுப்பா,
என் அப்பா அம்மா என்னை படிக்க வைக்கல.
மகன் - உனக்கு மட்டும் எவ்வளவு நல்ல அப்பா அம்மா கிடைச்சிருக்காங்கள்.



### தாரங்கி

உயிர் எழுத்தில் "அ",மெய் எழுத்தில் 'ம்', உயிர்மெய் எழுத்தில் 'மா' அழகு தமிழில் கோர்த்தெடுத்த முதலெழுத்து "அம்மா"

### சீலன்

ஒரு குட்டி பொண்ணு- கடைக்காரர் கிட்ட அங்கிள் நான் பெருசா வளர்ந்த பிறகு உங்க பையனை எனக்கு கல்யாணம் பண்ணி வைப்பீங்களா? கடைக்காரர் சிரித்துக் கொண்டே சரிம்மா பண்ணி வைக்கிறேன்.
குட்டி பொண்ணு- அப்படினா வரப்போற மருமகளுக்கு ஒரு Dairy Milk சாக்லேட் தாங்க



### கனிகா

எனது வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள். எத்தனை முறை நான் கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்.
-நெல்சன் மண்டேலா-

### மீனா

வாழ்க்கையில் எந்த பிரச்சினையாக இருந்தாலும் Feel பண்றதை விட அது எதுவாக இருந்தாலும் பரவாலனு Deal பண்றது நல்லது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலங்காட்டில் பெருமளவு எரிபொருள் மீட்பு சந்தேக நபர் வழக்கில் இருந்து விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றிப் பெற்றோலை விற்பனை செய்ததாகவும் மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பனவற்றை தனது உடைமையில் வைத்திருந்ததாகவும் ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் அவரை விடுதலை செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் குறித்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1660 லீற்றர் மண்ணெண்ணெய், 306 லீற்றர் பெற்றோல், 210 லீற்றர் டீசல் என்பன சான்றுப் பொருட்களாக வழக்கு விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டன.

குற்றம்சாட்டப்பட்ட நபர் பெற்றோல் விற்பனை எதனையும் தான் மேற்கொள்ளவில்லை எனத் தனது சாட்சியத்தில் தெரிவித்ததுடன் விவசாய நடவடிக்கைகளுக்காக குறித்த எரிபொருட்களைத் தான் சேகரித்து வைத்திருந்தாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் விவசாயத் திணைக்களத்தால் தனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் தனது இரண்டு மோட்டார்ச் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, லான்ட்மாஸ்டர் என்பவற்றின் பதிவுச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தார்.

இந்நிலையில் குறித்த நபர் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டிய பாவனையாளராகக் கருதப்பட வேண்டும் எனவும் அந்த அடிப்படையில் எரிபொருட்களை அவர் தன் வசம் வைத்திருப்பது குற்றமாகாது எனவும் அவரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி குறிப்பிட்டார்.

சகல விடயங்களையும் பரிசீலித்துப் பார்க்கையில் இரண்டு குற்றச்சாட்டுக்களிலிருந்தும் குறித்த நபரை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்து மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி. காயத்திரி சைலவன் தீர்ப்பு வழங்கியதுடன் கைப்பற்றப்பட்ட எரிபொருட்களை குறித்த நபரிடமே மீளக் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

(4-18-33)

# எரிபொருள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் இருந்து 1590 லீற்றர் எரிபொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர். (4)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். செல்லையா தவனேஸ்வரன்

[உரிமையாளர் தபேசன் விவசாய மாளிகை - கோண்டாவில்]



மண்ணில் - 10.04.1955
விண்ணில் - 20.07.2019

திதி: திருதியை
(15.08.2022)

அன்பின் திருவுருவே
எட்ட முடியாத
தொலைவு சென்று
ஆண்டு மூன்றல்ல
ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த
நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

(C-4738)

## 32 வருட இதய அஞ்சலி

மண் உலகில் 09 – 02 – 1927



விண் உலகில் 14 – 08 – 1990

அமரர். திருமதி. மேரி நவமணி அருளானந்தம்

(60/1 A, SOLOMANE LANE OLD PARK ROAD, CHUNDIKULI-JAFFNA)

அன்பிலும், ஈகையிலும் உங்களை விட
எமக்குயாருளர் அம்மா
எங்களை நீங்கா துயரில்
ஆழ்த்திவிட்டு எங்கு மறைந்தீர் அம்மா
என்றும் உமது நினைவுகளுடன் வாழும்

குடும்பத்தினர்.

"Daisy Kudil"
104/18A sangamitha mawatha,
kotahena, colombo - 13

(12436)


## இராசிபலன்

15.08.2022
ஆடி 30, திங்கட்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.49 வரை

உத்திரட்டாதி பின்னிரவு 2.22 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

சங்கடகர கணபதி விரதம்
சந்திராஷ்டமம் - மகம்

வளவன்

**மேஷம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவர்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** — செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்புக்களைத் தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன நன்மையுண்டு.

**ரிஷபம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது, ரோக பயமுண்டு, நடப்பதெல்லம் நன்மைகேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** — எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**மிதுனம்** — உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அரச வழியில் அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி** — குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், சுபகாரியங்கள் கூடும் நாள்.

**மீனம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாப் போர்களுக்கும் முடிவு சமாதானமே"

# மண்ணெண்ணெய் இல்லாததால் குருநகர் மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகரில் கடற்றொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டு தொழில் செய்து வரும் மீனவக் குடும்பங்கள் எரிபொருள் இன்மையால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக குருநகர் றெக்ளமேசன் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நாளாந்தம் தொழில் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கைச் செலவை ஓட்டுவதாகவும் மண்ணெண்ணெய் இன்மையால் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொழிலுக்குச் செல்வதாயின் 40 வீதமான மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. கறுப்புச் சந்தையில் 1200 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலை தொடருமாயின் மீனவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிடும். எனவே மீனவர்களுக்கு எரிபொருள் வழங்க உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# அதிக கட்டணம் அறவிட்ட வாகன பாதுகாப்பு நிலையம் மூடப்பட்டது

(குப்பிழான்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் அமைந்துள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் யாழ்.மாநகரசபையால் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிட்ட வாகனப் பாதுகாப்பு நிலையும் யாழ்.மாநகரசபையின் அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் அடியவர்களிடமிருந்து அதிக பணம் அறவிடப்படுவதாக யாழ்.மாநகரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

முறைப்பாட்டின் அடிப்படையில் மாநகரசபை அதிகாரிகள் உரிய முறையில் கண்காணித்து குறித்த விடயம் உண்மை என்பதை உறுதிப்படுத்தினர். இதனையடுத்து இந்த வாகனப் பாதுகாப்பு நிலையம் யாழ்.மாநகரசபையினால் அறிவிக்கப்பட்ட கட்டணத்திற்கு அதிக கட்டணம் அறவிட்டமையால் யாழ்.மாநகரசபையால் பூட்டப்பட்டது. (4-18)

# ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர் தடைகளையும் நீக்குக

## ரெலோ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி ரணில் சில புலம்பெயர் அமைப்புக்களின் தடைகளை நீக்கி உள்ளதை வரவேற்கிறோம். அதேநேரம் இன்னும் பல அமைப்புக்களும் தனிநபர்களுடைய பெயர்களும் தடை செய்யப்பட்டபட்டியலிலேயே காணப்படுகிறது. அவர்கள் மீது உள்ள தடையை நீக்குமாறு நாம் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருகிறோம் என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நமது கோரிக்கையின் பிரதான காரணம் நாடு எதிர் கொண்டிருக்கும் பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்கு முதலீடு மிக அவசியமாகிறது. புலம்பெயர் உறவுகள் பலர் இங்கு முதலீடு செய்வதில் இருக்கக்கூடிய பிரதான சிக்கல் பாதுகாப்பின்மை ஆகும்.

தாங்கள் பாரிய முதலீடுகளை இங்கு ஏற்படுத்திய பின்னர் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்பு இருப்பதாக காரணம் காட்டி தங்கள் முதலீடுகளை முடக்கவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யவும் முடியும் என்று அச்சம் கொள்கிறார்கள். முகநூல் இணைப்புக்களை காரணம் காட்டியே பலர் கைது செய்யப்பட்ட சம்பவங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்த தடைகளை நீக்குவது அவசியம் என்று உங்களிடம் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆகவே இதை கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புக்களையும் தனிநபர்களின் பெயர்களையும் நீக்குமாறு கோருகிறோம் அவர் என மேலும்தெரிவித்தார். (4)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)


சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

38 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



யாழ். மாவட்ட பெண் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை பலாலி வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. (படம்- சுபேசன்)



முல்லைத்தீவு வல்லிபுனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14ஆம் திகதி இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்-ரவிசாந்)

# வென்மேரி விருதுகள் வழங்கல்

(குப்பிழான்)

வென்மேரி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தமிழின் ஆற்றல் மிகு ஆளுமைகளை அங்கீகரித்துக் கௌரவிக்கும் வென் மேரி விருதுகள்-2021-2022 வழங்கும்விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

மேற்படி நிகழ்வு வென்மேரி அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதலாவது தடவையாக இடம்பெற உள்ளதுடன் எதிர்வரும் காலங்களிலும் வருடா வருடம் பல்வேறு துறைகளிலும் தமிழில் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்திய ஆளுமைகளை இனம் கண்டு கௌரவிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் மேற்படி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி தலைவர் வென் சிலாஸ் அனுரா தெரிவித்துள்ளார். (4-18)

# மந்துவிலில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் சைக்கிளில் பயணித்த மந்துவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 50 வயதான நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 500 |
| தக்காளி | 380 | 380 | 380 | 380 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 300 | 240 |
| கோவா | 350 | 380 | 280 | 400 |
| கரட் | 280 | 360 | 380 | 400 |
| பூசணி | 130 | 100 | 120 | 150 |
| புடோல் | 100 | 80 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 140 | 130 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 180 | 160 |
| பாகற்காய் | 450 | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 320 |
| பீற்றூட் | 160 | 200 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 550 | 700 | — | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 400 | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 320 | 400 |
| முள்ளங்கி | 140 | 80 | 120 | 250 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 200 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'முடிந்தால் கோட்டாவுக்கு எதிராக வழக்கு தொடருங்கள் பார்க்கலாம்'

## மேஜர் அஜித் பிரசன்ன சவால்

(கொழும்பு)

**முடிந்தால் கோட்டாபயவுக்கு எதிராக வழக்குத் தொடரு ங்கள் அல்லது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளியுங்கள் பார்க்கலாம் என இராணுவ அதிகாரியான மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.**

தனது முகநூல் பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கைக்கு அழைத்து வராமல் வெளிநாடு ஒன்றிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அனுப்பியதன் பின்னணியில் சதி இருப்பதாக குற்றம் சாட்டினார்.

மக்கள் போராட்டத்திற்கு முன்னர் பொதுஜன பெரமுனவில் உயர் பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் வகித்த பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் தற்போது இந்த நாட்டில் பகிரங்க அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், கோட்டாபயவிற்கு சரியான பாதுகாப்பு இல்லை என்று கூறி அவரை வெளிநாடுகளில் தங்க வைத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (4)

# விமான பற்றுச்சீட்டு கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் விமான பற்றுச்சீட்டு கட்டணம் உச்சக்கட்ட அதிகரிப்பை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமான பற்றுச்சீட்டு கட்டணம் அமெரிக்க டொலருக்கு நிகராக அறிவிக்கப்படுதல், கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் விமானங்களுக்கான எரிபொருள் தட்டுப்பாடு, விமான நிலைய கட்டண அதிகரிப்பு போன்ற பல காரணங்கள் இவ்வாறு விமான பற்றுச்சீட்டு அதிகரிப்பதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இலங்கைக்கு வரும் விமானங்களின் எண்ணிக்கை சுமார் 60 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலைமை இலங்கையில் உள்ள சுற்றுலாத்துறையையும், இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்கு தொழிலுக்குச் செல்லும் மக்களையும் மோசமாகப் பாதித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (4)

# சீனக் கப்பல் விஜயம் தொடர்பில் இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றது

## சரத் வீரசேகர

(கொழும்பு)

இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேவைக்கமைய எமது வெளிவிவகார கொள்கையினை மாற்றியமைத்துக் கொள்ளமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

யுவான் வாங் -05 கண்காணிப்பு கப்பல் உளவு பார்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகிறது என இந்தியா குறிப்பிடுவது அடிப்படையற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வெளிவிவகாரத் துறை அமைச்சர் அலி சப்ரியால் வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய முயற்சிப்பது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையின் வெளிவிவகார கொள்கையினை மலினப்படுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை யுவான் வாங்-5 கப்பல் விவகாரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அழுத்தம் பிரயோகிப்பதை அவதானிக்க முடிகின்றதோடு இந்தியா மற்றும் அமெரிக்காவின் யுத்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரும் போது சீனா ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (4)


## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
## கழிக்கப்பட்ட இரும்பு பொருட்களை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்தல்

சங்கத்தில் இருந்து கழிக்கப்பட்ட இரும்பு பொருட்களை, கொண்டேனர் பெட்டி-6, அறுவடை இயந்திரம் 1 உட்பட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

- **காலம் - 27.08.2022, சனிக்கிழமை**
- **ஜெயபுரம் வளாகத்தில் - காலை 9.00 மணிக்கு**
- **வாடியடி காரியாலய வளாகத்தில் - நண்பகல் 12.00 மணிக்கு**

குறித்த இரும்பு பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. 1,2 என இலக்கமிடப்பட்ட கொண்டேனர் பெட்டிகள்- வாடியடி அலுவலக வளாகத்திலும் 3,4 என இலக்கமிடப்பட்டது ஜெயபுரம் அரிசி ஆலையிலும் 5,6 என இலக்கமிடப்பட்டது ஜெயபுரம் அலுவலக வளாகத்திலும் உள்ளது.

இவற்றை உரிய இடங்களில் பார்வையிட்டு கொள்ளலாம்.ஏனைய பொருட்களை தலைமை அலுவலகத்தில் பார்வை இட்டு கொள்ளலாம்.மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கத்தால் மதிப்பிடப்பட்ட அடிமட்ட விலையில் இருந்து பகிரங்க ஏலம் ஆரம்பிக்கப்படும்.

அன்றைய தினமே கேள்வியாளர் அதற்குரிய பெறுமதியை செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். அல்லது 50 வீதம் முற்பண வைப்பு செய்யப்பட்டு மூன்று நாட்களுக்குள் அகற்றி செல்லப்படல் வேண்டும்.

**தலைவர், பூநகரி ப.நோ.கூ.சங்கம்.** (சி-4737)


# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாப்பரசர் நன்கொடை

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு லட்சம் யூரோக்களை பாப்பரசர் பிரான்சிஸ் வழங்கியுள்ளார்.

இலங்கை மதிப்பில் 36 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான குறித்த நன்கொடைப் பணத்தை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. (4)

# விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதில் அதிக கவனம்

## விவசாய அமைச்சர்

(கொழும்பு)

நெல் அறுவடையின் போது, விவசாயிகளுக்கு பிரச்சினையின்றி எரிபொருளை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளின் ஏகபோகத்தை வரும் பருவத்தில் இருந்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (4)


## பணி நிறைவு வாழ்த்து
## யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் சேவை செய்து ஓய்வு பெற்று சென்றவர்கள்

திருமதி. **கௌரி பஞ்சலிங்கம்**



**சேவை விபரம்**

கொ/கொட்டாஞ்சேனை அ.த.க.பாடசாலை 05.08.1984- 30.03.1987
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை 30.07.1987- 01.01.1989
கொ/கொழும்பு சென்செபஸ்ரியன் தமிழ் மகா வித்தியாலயம். 02.01.1989-01.11.1991
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 02.11.1991- 01.01.1992
யா/புற்றளை மகா வித்தியாலயம் 02.01.1992- 09.05.2010
யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை 10.05.2010- 15.04.2021

ரம்மியமான கற்பித்தலால்
மாணவத்தை அருமையாக
உருவாக்கி
விஞ்ஞானம் பயிற்றுவித்து
மணிமுடியாக திகழும்
திருமதி.கௌரி பஞ்சலிங்கம்
அவர்களே...

Best Wishes



திருமதி. **நிர்மலா பாலேந்திரா**

**சேவை விபரம்**

யா/குடத்தனை அ.த.க.பாடசாலை 09.10.1992- 31.12.1996
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 01.01.1997- 14.01.1997
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை 15.01.1997- 08.02.2010
யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை 09.02.2010- 09.07.2021

முதலெழுத்து சொல்லித்தர
மாணவர் கரம் பற்றி
முத்தான கையெழுத்தை
முன்னறிமுகம் செய்து வைத்து
முகமெல்லாம் பூரிப்பாய் மலர்ந்த
திருமதி.நிர்மலா பாலேந்திரா
அவர்களே...

(12418)

உங்கள் கல்விச் சேவைக்கு சிரம் தாழ்ந்த நன்றியுடன் பாராட்டுக்கள்.
உங்கள் ஓய்வுக் காலம் நிறைவான உடல் ஆரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் அமையட்டும்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இரு கேள்விகள்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீது ஏறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அவன் அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! இந்த பயங்கர நள்ளிரவில் ஏன் இப்படிச் சிரமப்படுகிறாய்? நீ என்னவோ தன்னலம் கருதாமல் இதைச் செய்தாலும் உன்னை உலகம் பாராட்டும் என்றா நினைக்கிறாய்? சுயநலக்காரர்கள் நேர்மை, நீதி, நியாயம் என்பவை பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை. இதை விளக்க உனக்கு காமினி, கனகரத்தினம் என்ற இருவரின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று கூறி கதையை ஆரம்பித்தது.

கனகபுரத்தை ஆண்ட கனகவர்மனின் மகள் காமினி. ஒரே மகளானதால் மன்னன் அவளுக்கு எல்லாப் படிப்புகளையும் சொல்லிக் கொடுத்தான். அவளது புத்திசாலித்தனத்தையும் திறமையையும் கண்டு பல நாட்டு இளவரசர்கள் அவளை மணந்து கொள்ளப் போட்டி போட்டனர். கனகவர்மனும் அவர்களது உருவப் படங்களை வரவழைத்துக் காமினிக்குக் காட்டினான்.

அவளும் அவற்றையெல்லாம் பார்த்து விட்டு "தந்தையே! இவர்களில் யாரும் எனக்கு ஏற்றவராகத் தோன்றவில்லை என் கணவர் நற்குணங்கள் கொண்டு அழகாயும் வீரச் செயல்கள் புரிபவராயும் இருக்க வேண்டும்" என்றாள்.



அது கேட்டு மன்னன் ஆச்சரியப்பட்டாலும் தன் மகளின் மனம் நோகக் கூடாதே என நினைத்து அவன் எதுவும் கூறவில்லை.

கனகபுரத்தின் வட எல்லையிலுள்ள காட்டுப் பகுதியில் ஒரு பிரம்ம ராட்சஸி இருந்தாள். அவள் அங்குள்ள மலைவாசிகளைப் பிடித்துக் கொன்று விழுங்கி வந்தாள்.

இதனால் மலைவாசிகள் பயந்து கனகவர்மனிடம் போய் "அரசே! எங்கள் பகுதியில் பிரம்ம ராட்சஸியின் அட்டகாசம் அதிகமாகி விட்டது. அது திடீர் திடீரென்று மக்களைத் தாக்கிக் கொன்று தின்று விட்டு மாயமாய் மறைந்து விடுகிறது. அது ஒருவனை பிடித்துத் தின்பதற்கு முன் அவனிடம் இரண்டு கேள்விகளைக் கேட்கிறதாம்.

அதற்குச் சரியான பதில் அவர்கள் சொல்லாமல் போவதால் அவர்களை அது விழுங்குகிறதாம். அந்தக் கேள்விகள் என்ன என்பது சரியாகக் காதில் விழாது போதிலும் முடிவில் அது தன் கேள்விகளுக்குச் சரியான பதிலைக் கூறி விட்டால் பிடித்த மனிதனை விட்டு விடுவதாகக் கூறுவது மட்டும் சிலருக்குத் தெளிவாகக் கேட்டதாம்" என்றார்கள்.

அதைக் கேட்ட கனகவர்மன் "கவலைப்படாதீர்கள். அந்த பிரம்ம ராட்சஸியை ஒழிக்க நான் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்" என்று கூறி அவர்களை அனுப்பினான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்


## முடியாத ஊடல்

இல்லை என்று மட்டும் சொல்வதை விட இன்னும் என்று சேர்த்துக் கொள்வது கொஞ்சம் இதமாக இருக்கும். ஆனால் அது தேவையில்லாத எதிர்பார்ப்பை வளர்க்குமே?

பரவாயில்லை, மெல்ல மெல்லத் தெரிகிறபோது பெரிய அதிர்ச்சிகளைக் கூட எளிதில் ஜீரணித்து விடலாம்.

படித்ததும் நிச்சயம் வருவார்...' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் மாதவி, நீ என்ன நினைக்கிறாய்?'

'படித்தால் வரக் கூடும்' இந்த பதிலில் இருந்த சமிக்ஞையை




மாதவி கவனிக்கவில்லை. அல்லது கவனிக்க விரும்பவில்லை.

அன்று மாலை மாதவி தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு கா[illegible]திருந்தாள். ஆனால்,

கோவலன் வரவில்லை.

"நாளை எதிர்பார்க்கலாம்" என்றாள் மாதவி.

"நாளை[illegible] எதிர்பார்க்கலாம். அவள் விரும்

நாளை எதிர்பார்க்க வேண்டியதில்லை" என்று நினைத்தாலும் வசந்த மாலை சொல்லவில்லை.

தோழி தேவந்தி சொன்ன விடயம் கண்ணகிக்கு சந்தோஷமாக இருந்தாலும் அவள் மனம் இனம்புரியாத ஒரு கலக்கத்தில் மூழ்கியிருந்தது. தான் கண்ட கனவை நினைத்துக் கவலை. தேவந்தி வெள்ளை உள்ளம் கொண்டவள் அவள் கதை வினோதமானது.

தாதி ஒருத்தி ஒரு குழந்தையின் மரணத்துக்குக் காரணமாக நேர்ந்தது. பெற்ற தாயிடம் என்ன பதில் சொல்வதென்று பயந்து போனாள். உடனே அவள் பாசாண்டச் சாத்தன் என்னும் தெய்வத்தை வேண்டிக் கொண்டாள். இறந்த குழந்தையின் உடலுக்குள் அந்த தெய்வமே புகுந்து உயிர்ப்பித்தது.!

பின்னர் அந்தப் பிள்ளை வளர்ந்து ஆளானது. அதை மணம் முடித்தவள் தான் தேவந்தி.

தான் பூமிக்கு வந்த பணி முடிந்ததும் பாசாண்டச் சாத்தன் புறப்பட்டுவிட்டார், இனி என்னை நீ கோயிலில் சந்திக்கலாம்." என்று கூறி மறைந்தார்.

தேவந்தி அதிர்ந்து போனாள். பாசாண்டச் சாத்தன்தான் தன் கணவராக வந்த விஷயம் அவளுக்கு எப்படித் தெரியும்? பிரிந்த கணவரை மீட்டுத் தருமாறு அந்தப் பாசாண்டச் சாத்தனையே வேண்டுவதற்காகக் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன், பெரிய விஷயத்திலும் தொடருவான்!

– இயேசுநாதர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## வேடனை வெல்ல வல்ல தமிழ்ப் புத்திமான் உண்டல்லோ

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதும் தனிநபர்கள் மீதும் ஏலவே விதிக்கப்பட்ட தடையில், சில அமைப்புக்களினதும் தனிநபர்கள் சிலரினதும் தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார்.

இத்தடை நீக்கப்பட்டமை தொடர்பில் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின் தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார் என்பதற்குள் இருக்கக்கூடிய உள்நோக்கம் என்ன? என்பது பற்றி கவனிப்பது இங்கு அவசியமாகிறது.

அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சியில் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்கும் என்பதை உறுதிப்படுத்துவதாக இருந்தால், அதற்கு அடையாளமாக முதலில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்ற சமநேரத்தில் தனது பிரதிநிதிகளை வடக்குக்கு அனுப்பி; காணாமல்போனவர்களின் உறவுகளைச் சந்திக்க வைத்து, தயவுசெய்து போராட்டத்தை கைவிடுங்கள். காணாமல்போனவர்கள் தொடர்பில் குறிப்பிட்ட காலஎல்லைக்குள் தகவல்கள் தெரியப்படுத்தப்படும் என்று உறுதிமொழி வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அந்த இரண்டையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்யவில்லை.

மாறாக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றினதும் தனிநபர்கள் சிலரினதும் தடையை மட்டும் நீக்கியுள்ளார்.

உண்மையில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடையை நீக்குவதாக இருந்தால், அதனை முழுமையாக நீக்க வேண்டும்.

அதைவிடுத்து சில அமைப்புகள் மீதான தடையை நீக்கும்போது, அது பல்வேறு குழப்பங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தும்.

அதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றின் மீதான தடையை நீக்கியுள்ளார் எனில், அவ்வாறு தடைநீக்கப்பட்ட அமைப்புகள் எத்தன்மையானவை. அவற்றின் தடையை நீக்குவதன் பின்னணியில் இருந்த காரணங்கள் என்ன? என்ற கேள்விகள் எழும்.

இத்தகைய கேள்விகள் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கிடையே சந்தேகங்களையும் ஐயுறவுகளையும் ஏற்படுத்தி புலம்பெயர் தமிழ் அமைப்புகளை உடைத்தும் சிதைத்தும் விடும்.

ஆக, வேடன் பழங்களைப் பறித்து வீசும்போது, மரத்தில் இருந்து விழும் பழங்கள் எங்ஙனம் சிதறிக்கிடக்கின்றன என்று சிந்திக்கக்கூடிய புத்திமான்கள் இருக்க வேண்டும்.

அப்போதுதான், வேடனின் உள்நோக்கத்தை வெற்றிகொண்டு மான்களைக் காப்பாற்ற முடியும் என்பதை தடைநீக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகள் புரிந்து கொள்வது அவசியம்.

# பாராளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளை அழைக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் கருத்துக்களை கேட்டறிவதற்கும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள அரசியல் கட்சிகளின் யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் எதிர்காலத்தில் குறித்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்குமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத சுமார் 50 அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. தேர்தல் சட்டத் திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விசேட குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் அண்மையில் தேர்தல்கள் ஆணைக்குழு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## புதிய ஆலோசனை குழுவை நிறுவியது மத்திய வங்கி

(கொழும்பு)

பொருளாதாரத்தின் முக்கிய ஆர்வலர்களுடனான ஈடுபாட்டினை விரிவுபடுத்தும் நோக்குடன் புதிய திட்டமொன்றை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதற்கிணங்க ஏற்கனவே தொழிற்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை ஆலோசனைக்குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக்குழு என்பவற்றை மாற்றீடு செய்து ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவொன்றை நிறுவியுள்ளது.

ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவிற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபேரத்ன தலைமை வகிக்கின்றார்.

தனியார் துறையையும் கல்வித்துறையையும் சேர்ந்த 17 பேர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (4-7)

## கால்வாய்க்குள் மூழ்கி பாடசாலை மாணவன் பலி

ரிதீகம, ஒகொடபொல மஹயாய கால்வாய்க்குள் மூழ்கி பாடசாலை மாணவரொருவர் உயிரிழந்துள்ளார்.

மாணவர்கள் சிலர் நீராடுவதற்காக குறித்த கால்வாய்க்கு சென்றிருந்த நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கிய சிறுவன் மீட்கப்பட்டு கோனியாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பொல்கொல்ல பகுதியைச் சேர்ந்த 16 வயதான மாணவரொருவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். (4-7)

## அடுத்த தேர்தலில் பெரமுன காணாமல் போய்விடும்

### மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடுத்த தேர்தலில் எம்.பிக்களைக் கூட வெற்றிகொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஊடகங்களிடம் நேற்று தெரிவித்தார்.

இதன் காரணமாகவே அரசு தேர்தலுக்குச் செல்ல அஞ்சுகின்றது எனவும், அதிகாரத்தைத் தக்க வைக்க வேறு வழிகளை அரசு தேடுகின்றது எனவும் அவர் கூறினார்.

ஆனால், தற்போது தேர்தலை நடத்துவது அத்தியாவசியமானது எனவும், குறுகிய காலத்தில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கிவிட்டு தேர்தலை நடத்த வேண்டும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் குறிப்பிட்டார்.(4-7)

## பண மோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்காக இத்தாலி செல்ல போலியான .ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த கைது இடம் பெற்றுள்ளது.

சந்தேகநபர் ஆடியம்பலம பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஒருவராவார்.

இவர் புத்தளம் - வென்னப்புவ பிரதேசத்தில் அலுவலகத்தை நடத்தி வந்துள்ளார்.

இத்தாலியில் வேலைக்குச் செல்லும் நபரின் ஆவணங்களை விரைவாகத் தயாரிக்க, 2,000 யூரோக்கள் அல்லது எட்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை கோரியுள்ளார்.

இந்த சந்தேகநபர் இத்தாலிய ஆவணங்களை தயாரிப்பதற்காக மேலும் பலரிடம் பணம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது, அவரது தனிப்பட்ட வாகனத்தில் இத்தாலிய தூதரகத்தின் உத்தியோகபூர்வ முத்திரைகள் போன்ற போலி முத்திரைகள் மற்றும் பல ஆவணங்களும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(4-7)

## அச்சுவேலியில் 4 கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு

யாழ். அச்சுவேலி - காலானை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் நேற்று பிறந்துள்ளது.

மகாராஜா கௌரி என்ற குடும்பப் பெண் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றார். கோழி வளர்ப்பினை[illegible] அவர் [illegible] கொண்டு வருகின்றார்.

இவரது வீட்டில் ஆறு கோழிக்குஞ்சுகள் பொரித்த நிலையில், அதில் ஒன்று நான்கு கால்களுடன் காணப்படுகின்றது.

ஏனைய கோழிக்குஞ்சுகளைப் போல குறித்த கோழிக்குஞ்சும் சுறுசுறுப்பாக காணப்படுகின்றது.

குறித்த கோழிக்குஞ்சினை பிரதேசத்திலுள்ள [illegible] வயிட்டு வருகின்றனர். (4-104)

## அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் எண்ணம் இல்லை

### பழனி திகாம்பரம்

அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் எண்ணம் இல்லை என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவை - லின்போர்ட் தோட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 51

**தேர்தலில் இரு முக்கியப் போட்டியாளர்கள் அப்போதைய பிரதமரும் அரசாங்கத்தின் ஆதரவு வேட்பாளருமான விக்டர் யானுகோவிச் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் விக்டர் யுஷ்செங்கோ ஆகியோர் ஆவர்.**

**விக்டர் யானுகோவிச் அவர்களை அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி லியோனிட் குச்மா மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் ஆதரித்தனர். விக்டர் யுஷ்செங்கோ ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் ஆதரவை அவர் பெற்றிருந்தார்.**

தேர்தலின் கடைசி கட்டங்களில் விக்டர் யுஷ்செங்கோவுக்கும் விக்டர் யானுகோவிச்சுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது.

ஒருபக்கச் சார்பு ஊடகங்கள், வாக்காளர்களை மிரட்டுதல் மற்றும் வேட்பாளர் யுஷ்செங்கோவுக்கு டையாக்சின் (dioxins) விஷம் கொடுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளுடன், அதிக சுறுசுறுப்பான அரசியல் சூழ்நிலையில் தேர்தல் நடைபெற்றது.

உக்ரைனின் தேர்தல் சட்டத்தின்படி, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க தேர்தலில் இரண்டு சுற்றுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரு வேட்பாளர் முதலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 50% க்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும் என்று தேர்தல் முறைமை கூறுகிறது. முதல் சுற்றில் வேட்பாளர்கள் யாரும் இந்த வரம்பைக் கடக்கவில்லை என்றால், மூன்று வாரங்களுக்குள் இரண்டாம் சுற்றுத் தேர்தல் நடத்தப்படும். முதல் சுற்றில் அதிக வாக்குகளைப் பெற்ற இரண்டு வேட்பாளர்கள் இரண்டாவது சுற்றில் போட்டியிடுவார்கள். இரண்டாம் சுற்றில் அதிக வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். இத் தேர்தல் முறைமையில் ஒரு வாக்காளர் அனைத்து வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களிக்க விரும்பினால் வாக்களிக்கும் முடியும்.

முதல்கட்ட வாக்குப்பதிவு ஒக்டோபர் 31 ஆம் திகதி நடைபெற்றது. இத் தேர்தலின் முதலாம் சுற்றில் வாக்களிக்க 37,613, 022 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 28,035,184 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 834,426 ஆகும். வாக்களிப்பு வீதம் 74.54% ஆகும். தேர்தலின் முதலாம் சுற்றில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட விக்டர் யுஷ்செங்கோ 11,188,675 வாக்குகள் (39.90%) பெற்று முதலிடத்திலும் பிராந்தியங்களின் . கட்சி வேட்பாளர் விக்டர் யானுகோவிச்சு 11,008,731 வாக்குகள் (39.26%) பெற்று இரண்டாம் இடத்திலும் இருந்தனர். எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 556,962 ஆகும்.

முதலாம் சுற்று வாக்கெடுப்பில் 75 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தாலும், தேர்தல் பார்வையாளர்கள் (election observers) பல முறைகேடுகள் நடந்ததாக புகாரளித்தனர், குறிப்பாக யுஷ்செங்கோவின் ஆதரவு வலுவாகக் காணப்பட்ட பகுதிகளில் இம் முறைகேடுகள் நடந்ததாக குறிப்பிட்டனர். இது முடிவில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது தெரியவில்லை.

இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு நவம்பர் 21 அன்று நடைபெற்றது.

**தேர்தலில் எவரும் அறுதிப் பெரும்பான்மை பெறாத காரணத்தால் இரண்டாம் சுற்றுத் தேர்தல் இரு வேட்பாளர்களுக்குமிடையே (யானுகோவிச் மற்றும் விக்டர் யுஷ்செங்கோ) நடை பெற்றது.**

புடின் அணிவகுப்புகளிலும் டிவியிலும் யானுகோவிச்சுடன் தோன்றினார்.

**நவம்பர் 1-13: ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், குச்மாவின் ஆதரவு வேட்பாளர் யானுகோவிச்சுக்கு பிரச்சாரம் செய்ய உக்ரைனுக்கு விஜயம் செய்தார்.**

இரண்டாம் சுற்றில் வாக்களிக்க 37,613,022 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 30,511,289 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 488,025 ஆகும். வாக்களிப்பு வீதம் 81.12% ஆகும். இவர்கள் இருவருக்குமிடையே நடந்த இரண்டாம் சுற்றுத் தேர்தலில் விக்டர் யுஷ்செங்கோ 14,222,289 வாக்குகள் (46.61%) பெற்று இரண் டாம் இடத்தையும் பிராந்தியங்களின் கூட்டுக் கட்சி வேட்பாளர் விக்டர் யானுகோவிச் 15,093,691 வாக்குகள் (49.46%) பெற்று முதலிடத்தையும் பெற்றனர்.

எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 707,284 ஆகும். இருப்பினும் கருத்துக் கணிப்புகள் யுஷ்செங்கோ முன்னிலையில் இருப்பதாக தெரிவித்திருந்தது.

**இரண்டாம் சுற்றில் விக்டர் யானுகோவிச் வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. அதைத் தொடர்ந்து ஆரஞ்சு புரட்சி ஏற்பட்டது. விக்டர் யுஷ்செங்கோவின் பதாகைகளின் (banners) நிறம் ஆரஞ்சு நிறத்தில் இருந்ததால் "ஆரஞ்சு புரட்சி" என்ற பெயர் வந்தது.**

(தொடரும்)

# ட்ரம்பின் மாளிகையில் இருந்து இரகசிய ஆவணங்கள் மீட்பு

(வோஷிங்டன்)


அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்டு ட்ரம்பிற்கு சொந்தமாக மார்-ஏ-லகோ என்ற மாளிகை புளோரிடா மாகாணத்தில் உள்ளது. இந்த மாளிகையில் கடந்த 8 ஆம் திகதி எப்.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்ற டிரம்ப், வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறியபோது இரகசிய ஆவணங்களை பெட்டியில் வைத்து எடுத்துச் சென்றதாகவும் அந்த ஆவணங்களை இந்த மாளிகையில் வைத்து இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இரகசிய ஆவணங்களை கண்டுபிடிப்பதற்காக டிரம்பின் மாளிகையில் சோதனை நடத்தப்பட்டது. இச்சோதனைக்கு டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்தார்.

அதேவேளையில் சோதனைக்கு முழு ஒத்துழைப்பு அளித்ததாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் டிரம்பின் மாளிகையில் இருந்து இரகசிய ஆவணங்கள் கைப்



பற்றப்பட்டுள்ளதாக எப்.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதில், அரசு கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கக் கூடிய இரகசிய ஆவணங்கள் டிரம்பின் மாளிகையில் கைப்பற்றப்பட்டதாகவும் பிரான்ஸ் ஜனாதிபதி குறித்த தகவல்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, சோதனையில் அணு ஆயுதங்கள் தொடர்பான இரகசிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக வோஷிங்டன் போஸ்ட் ஊடகம் தெரிவித்துள்ளது. (4)


# குரங்கு அம்மை தொற்றுக்கு புதிய பெயர்களை சூட்டியது உலக சுகாதார அமைப்பு

**(ஜெனிவா)**

**உலகளவில் அச்சுறுத்தி வரும் குரங்கு அம்மை தொற்றுக்கு உலக சுகாதார அமைப்பு புதிய பெயர்களைச் சூட்டியது.**

கொரோனா தொற்றுக்கு மத்தியில் குரங்கு அம்மையும் உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இது வரை 89 நாடுகளில் 27 ஆயிரத்து 814 பேருக்கு இந்தத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டு முதன்முதலாக கண்டறியப்பட்டபோதுதான் இந்த நோய்க்கு குரங்கு அம்மை என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த நிலையில், குரங்கு அம்மை மாறுபாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பு புதிய பெயர்களை சூட்டி உள்ளது. மத்திய ஆபிரிக்காவில் உள்ள காங்கோ அம்மை மாறுபாடுகளுக்கு



கிளேட் 1. மேற்கு ஆபிரிக்காவில் கிளேட் 2 என பெயர் சூட்டப்பட்டுள்ளது. கிளேட்-2 வைரஸ், 2 துணை வைரஸ்களை கொண்டுள்ளது. அவை கிளேட் 2-ஏ, கிளேட் 2-பி என அழைக்கப்படும். உலகளாவிய நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து இந்தப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

தற்போது உலகளவில் பரவி வருவது கிளேட் 2-பி வைரஸ் ஆகும். புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள வைரஸ்கள், தொடர்புள்ள நோய்கள் மற்றும் வைரஸ் மாறுபாடுகள் எந்தவொரு கலாசார, சமூக, தேசிய, பிராந்திய தொழில்முறை மற்றும் இனக்குழுக்களுக்கு தீங்கு ஏற்படுத்துவதைத் தவிர்க்கிற வகையிலும், வர்த்தக சுற்றுலா, சுற்றுலா அல்லது பிராணிகள் நலனில் எதிர்மறை விளைவுகளை குறைக்கும் விதத்திலும் இந்தப் பெயர்களால் அழைக்கப்பட வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கூறி உள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

தியசாலைகளில் சத்திரசிகிச்சைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய மருந்துகளை களஞ்சியப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## இலங்கை...

மாறிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதன்மூலம் தேசிய பாதுகாப்பு கூட நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ராஜபக்ஷர்களால் இந்நாட்டின் முதுகெலும்பு உடைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதி தேர்தலில் "ஐக்கிய பாதை"க்கு பதிலாக "தவறான பாதையை" தெரிவு செய்ததன் அவலத்தை இன்று நாடு எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டை கட்டியெழுப்பும் ஆற்றல் ஐக்கிய மக்கள் சக்திக்கே உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமை அரசியலமைப்பு ரீதியாக சரியானது என்றாலும், அங்கீகாரம் மற்றும் மக்கள் அபிப்பிராயம் என்ற அடிப்படையில் இது முற்றிலும் மாறுபட்ட நிலை எனவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். (4-7)

## ஆராய்ச்சியில்...

யையும் மேற்கொள்ளாது என சீனா உறுதியளித்துள்ளது.

சமீபகாலமாக சர்ச்சையை ஏற்படுத்தி வந்த சீனாவின் "யுவான் வாங் 5" கப்பலானது இலங்கை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைவதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கைத் துறைமுக அதிபர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் குறித்த கப்பல் நாளை அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை வந்தடையவுள்ளது என்றும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் எரிபொருள் நிரப்புவதற்கே எனக் காரணம் தெரிவித்தாலும் அதிநவீன தொழில்நுட்பங்கள் கொண்ட கப்பல் என்பதால் பாதுகாப்பு அச்சம் நிலவி வருகின்றது.

இதனால் கப்பலின் வருகையை இந்தியா எதிர்த்து வந்ததுடன் கப்பலின் வருகைக்கான காரணத்தை விளக்குமாறும் அத்தோடு இலங்கையில் தரித்து நிற்கும் காலத்தில் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட போகின்றது என்பது குறித்து தெளிவுபடுத்துமாறும் கோரியிருந்தது.

மேலும், இந்நாட்டு கடலில் எந்த அறிவியல் ஆராய்ச்சியும் செய்யக் கூடாது என் இலங்கை அரசு வலியுறுத்தியிருந்தது.

அதன்படி, சீனாவின் யுவான் வாங் 5 கப்பலானது நாட்டின் கடல் எல்லைக்குள் எந்த அறிவியல் ஆராய்ச்சியையும் மேற்கொள்ளாது என உறுதியளித்துள்ளது. (4-7)

## அமைதியை...

இறையாண்மை மீறப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்திய இறையாண்மை நிலத்தில் சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் மூன்றாம் தரப்பினரின் தலையீடு இந்தியாவின் இறையாண்மையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.(4-7)

## நல்லூர்த் திரு...

கொள்ளையிட்ட 4 லட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலியும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். (ம-7)

## முன்னணியின்...

தாவது, உடுவில் ஆலடி முகாம் பகுதியில் 16ஆவது செஞ்சோலை படுகொலை நினைவேந்தலை அனுஷ்டிக்க நேற்று மாலை 4 மணியளவில் ஒழுங்குபடுத்தப்பட்டு அங்கு அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு கூடிய அப்பகுதியைச் சேர்ந்த வேறு சிலர் தமக்கு இது பற்றி அறிவிக்கவில்லை என்று கூறி அங்கு குழப்பத்தில் ஈடுபட்டதுடன் ஊடகவியலாளர்களை செய்தி சேகரிக்கவும் அனுமதிக்கவில்லை.

அத்துடன் அப்பகுதியில் புலனாய்வுப் பிரிவினரின் நடமாட்டத்தையும் அவதானிக்கமுடிந்தது.

பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினர் திட்டமிட்ட செயலே செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் குழப்பத்திற்கு காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அங்கு கருத்து தெரிவித்தார். (4-7)

## மேலும்...

ணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16, 621 ஆகும். (4-7)

## பதவிகளை...

அவ்வாறானதொரு சர்வகட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர், நாட்டிலுள்ள பொதுமக்களின் அபிலாசைகள் இல்லாதொழிக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி ஆகிய நாம் அரசாங்கத்தின் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

பிழையான செயற்பாடுகளுக்கு நாம் எதிர்ப்பு வெளியிடுவதுடன் அந்த பிரச்சினையை தீர்க்க யோசனைகளை முன்வைப்போம்.

நாடு வீழ்ந்துள்ள நிலையிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப நாம் எதிரணியிலிருந்து செயற்படுவோம் என்றார். (4-7)

## அமெ...

இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க.வேண்டும் எனத் தெரிவித்து இந்த தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டாவது ஜெனிவா தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளதோடு, அவை தொடர்பில் செயற்படுவதற்கு நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த புதிய ஜெனிவா தீர்மானத்திற்கு பிரித்தானியா உட்பட ஐந்து நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

2015ஆம் ஆண்டு அமெரிக்கா இலங்கைக்கு எதிரான 30/1 ஜெனிவா தீர்மானத்தை முன்வைத்ததுடன் அதற்கு இலங்கை ஒப்புக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## மானிப்பாயில்...

சுப்பர் மார்க்கெட் மீது நேற்றிரவு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பின்னர் அங்கு பணிபுரியும் தெல்லிப்பளையில் வசிக்கும் ஜெயக்குமார் சஜீந்திரன் என்ற 21 வயதுடைய இளைஞனின் இடது கையை வெட்டிச் சென்றனர்.

கையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன் காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

தன நிதானய
திகதி - 2022.08.14
சீட்டிழுப்பு இலக்கம் - 877
G 27 55 62 69

மஹஜன சம்பத
திகதி 2022/08/14
சீட்டிழுப்பு இலக்கம் 4847
K 3 0 4 1 4 2

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 156
விருச்சிகம் 02 42 43 61 விருச்சிகம்

மெகா பவர்
திகதி 14/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1195
W 07 30 52 54 64

கொவிசெத
திகதி 2022.08.14
சீட்டிழுப்பு இலக்கம் 3089
L 10 13 69 71

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1822 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.14 தினம் ஞாயிற்றுக்கிழமை
J 05 14 43 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,214,640/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.14
சீட்டிழுப்பு இல : 3983
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 2,364,220/-
04 23 67 68 T

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 209
சீட்டிழுப்பு திகதி 2022.08.14
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 11 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,529,960/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,639,740/-
திகதி 2022-08-14
வெற்றி வாரம் 3534
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 11 13 40 52 மிதுனம்
ரூ. 5,626,320/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 14 01 02 27 46
998
மஞ்சள்
2022.08.14
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 253,558,387/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1648
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.14
ரூ. 3,582,520/-
09 31 38 48 L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எந்த விதத்திலும் உதவ முன்வரக் கூடாது

## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)



**இன அழிப்புக்கான பொறுப்புக்கூறலை மனித உரிமை பேரவையிலே தொடர்ந்து வலியுறுத்தி வருகையில் இதற்கான எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.**

யாழிலுள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறையாவது இந்த பொறுப்புக்கூறலினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலே பாரப்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றக்கூடாது .

தமிழ் மக்களுடைய பெயரால் இந்திய, மேற்குலக நாடுகள் இலங்கைத்தீவின் மீது தங்களுடைய பூகோள ஆதிக்கத்தினை நிலைநிறுத்திக்கொள்வதற்காக இந்த தீர்மானங்களை ஒரு கருவியாக பயன்படுத்திக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கையில் வைத்துக் கொண்டு உள்ளக தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள்.

இவர்களுக்கு சார்பாக சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன .

ஜெனிவா கூட்டத்தொடர் வரவிருக்கின்ற நிலையில் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் நபர்கள் மீதும் இருக்கின்ற தடைகளை ரணில் அரசாங்கம் நீக்கி இருக்கின்றது இதற்கு 2 காரணங்கள் இருக்கலாம் என பேசப்படுகின்றது.

ஒன்று மனித உரிமை கூட்டத்தொடரை எதிர்கொள்வது மற்றும் புலம்பெயர் தமிழ் மக்களு டைய பொருளாதார முதலீட்டை நாட்டிற்கு கொண்டு வருவது என்பதாகும்.

எங்களைப் பொறுத்தவரையில் புலம்பெயர் அமைப்புக்களின் மேல் ஏற்படுத்தப்பட்ட தடை நீதிக்கு முரணானது. அரச பயங்கரவாதத்தின் அராஜக நடவடிக்கை யாகதான் இந்த தடை அமைந்திருந்தது.

எனவே அரசியல் ரீதியான தீர்வொன்றை அதாவது அரசியலமைப்பு மாற்றமொன்றை ஒரு சமஷ்டி அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை புலம்பெயர் மக்கள் இந்த அரசுக்கு எந்தவகையிலும் ஒத்துழைப்பை வழங்கக்கூடாது எனவும் தெரிவித்தார். (4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12439)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12404)

076 825 7716 (ஆகாஸ்)

**விற்பனையாளர் தேவை**

பெரிய கடை வீதியில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு O/L, A/L படித்த தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.

**சிவகணேசன் Tex**
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (C-4741)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் **செல்லர் சின்னராசா**

(ஆமண்ணை/ஜெயக்குட்டி)

தோற்றம் 13.05.1951 | மறைவு 16.07.2022



கடந்த 16.07.2022 (சனிக்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் இக்கணம் வரை எமது தேவைகளை பூர்த்திசெய்து தோளோடு தோள் நின்ற அன்புள்ளங்களுக்கும் இவ்வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.08.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர் (12433)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.